# இந்திய ஒருமைப்பாட்டை சிதைக்கும் தேசவிரோதிகள் யார்?


## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தியா என்பது ஒற்றை நாடல்ல, இது ஒரு துணைக் கண்டம். பல மொழிகளைப் பேசும் தேசிய இனங்களைக் கொண்ட நிலப்பரப்பு என்பதை ஒட்டுமொத்த மக்களும் உணர்ந்துகொள்ளும் வகையில் நாடாளுமன்றத்தில் முதன்முதலில் உரக்க முழங்கிய இயக்கம் நம் தி.மு.கழகம். அதன் விளைவாகத்தான்,

**இந்திய ஒன்றியத்தின் பன்முகத் தன்மையையும் மொழிவழிப் பண்பாடுகளையும் குலைப்பவர்கள் தான் உண்மையான தேசவிரோதிகள்.**

**“இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை ஆட்சிமொழியாக ஆங்கிலம் நீடிக்கும்”** என்ற உறுதிமொழியை பிரதமர் நேரு வழங்கினார். தென்னிந்திய மாநிலங்கள் மட்டுமின்றி, அசாம், மேற்குவங்கம் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் ஆட்சிமொழி என்ற பெயரில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் எழுப்பினர். பிரதமர் நேரு தனது உறுதி மொழி மீறப்படாது எனக் கடிதம் வாயிலாக உறுதி செய்தார்.

தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.வெ.கி.சம்பத் அவர்களுக்கு 1960ஆம் ஆண்டு பிரதமர் நேரு உத்தரவாதம் அளித்து எழுதிய



ஓமந்தூரார்

டி.டி.கிருஷ்ணமாச்சாரியார்

ஈ.வெ.கி. சம்பத்

கடிதத்தை, சென்னை கடற்கரையில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் இலட்சக்கணக்கில் திரண்டிருந்த மக்களின் முன் வெளியிட்ட பேறறிஞர் அண்ணா, **“என் தம்பிக்கு வாக்குறுதியை வரைந்துள்ள இந்தக் கரம், (அமெரிக்க ஜனாதிபதி) ஐசனோவ**

**தி.மு.க ஒரு போராட்டத்தைக் கையில் எடுத்தால் இந்தியாவை ஆட்சி செய்பவர்கள் அஞ்சுகிறார்கள்–அலறுகிறார்கள்.**

**ரோடு கைக்குலுக்கிய கரம், ட்ரூமனோடு கைகுலுக்கிய கரம், (எகிப்து) நாசரோடு கைகுலுக்கிய கரம். இந்தக் கரம்தான் என் தம்பிக்கு கையெழுத்திட்டு வாக்குறுதியை வழங்கி யுள்ளது”** என நேருவின் வாக்குறுதியைக் குறிப்பிட்டார்.

கடற்கரையில் முழங்கிய அண்ணா 1962ஆம் ஆண்டு இந்தியநாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகி ஆற்றிய முதல் உரையே ஒட்டுமொத்த அவையையும் கட்டிப் போட்டது. **‘I belong to the Dravidian Stock’** என்ற அவரது புகழ்பெற்ற உரை, மாநில மொழிகள் மீதான பிரதமர் நேரு உள்ளிட்ட ஆட்சியாளர்களின் பார்வையில் புதிய திருப்பத்தை உருவாக்கியது. 1963ஆம் ஆண்டு மே மாதம், **‘இந்தி அச்சுறுத்தலை எதிர்ப்போம்’** என்று மாநிலங்களவையில் அண்ணா ஆற்றிய உரை இந்தியை ஆட்சிமொழியாக்குவதால் இந்தியாவின் பிற மொழிகள் எப்படியெல்லாம் பாதிக்கப்படும் என்பதை

**நமது தொடர் போராட்டங்களுக்குப் பிறகே, ரயில் நிலைய பெயர்ப் பலகைகளில் முதலிடத்தில் இருந்த இந்தி எழுத்துகளுக்குப் பதிலாக, தமிழ் முதலிடம் பிடித்தது.**

தன் அழுத்தமான வாதங்களால் முன்வைத்தார்.

அந்நிய மொழியான ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளும்போது, இந்திய மொழியான இந்தியை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று ‘அறிவு ததும்பி வழியும்’ இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களும் அவர்களின் கட்சியினரும் கேட்கிறார்கள். ஆங்கிலம் எல்லா மாநிலங்களுக்கும் அந்நிய மொழி. ஆனால், இந்தி சில மாநிலங்களுக்கு மட்டும்

**இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை ஆட்சிமொழியாக ஆங்கிலம் நீடிக்கும் என்ற உறுதிமொழியை பிரதமர் நேரு வழங்கினார்.**

தாய்மொழி. தமிழ்நாடு உள்ளிட்ட மற்ற மாநிலங்கள் அனைத்திற்குமே அது அந்நிய மொழி.

இதனை நாடாளுமன்ற மாநிலங்களவையில் மிகத் தெளிவாக விளக்கிய பேறறிஞர் அண்ணா அவர்கள், **“இந்தி பேசும் மாநிலங்களின் மக்களுக்கு அதுவே தாய்மொழியாக இருக்கும். அதுவே அரசு மொழியாகவும் இருக்கும். அதுவே பயிற்று மொழியாகவும் இருக்கும். அதுவே மத்திய அரசின் மொழியாகவும் இருக்கும். இந்தி பேசும் மக்களுக்கு இவ்வளவு வாய்ப்புகள், உரிமைகளை வழங்கிவிட்டு,**

**சமஸ்கிருதத்திற்குப் பதில் தமிழிலேயே கோவில்களில் அர்ச்சனை செய்யலாமா? தமிழும் செம்மையான மொழிதானே?” என்று அவர்களைப் பார்த்துக் கேளுங்கள்!**

**இந்தி பேசாத (மற்றமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட) எம் போன்ற மக்களுக்கு எவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்துகிறீர்கள்?”** என்று கேட்டார்.

அன்று அண்ணா கேட்டதைத்தான் நாமும் கேட்கிறோம். அண்ணா உருவாக்கிய இருமொழிக் கொள்கையே தமிழ்நாட்டில் நீடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். ‘காலம் மாறிவிட்டது அதனால் இந்தியைத் திணிப்போம்’ என்கிறார்கள் இன எதிரிகள். **எத்தனை காலங்கள் மாறினாலும் அதற்கு ஈடுகொடுத்து நிற்கும் செம்மொழியாம் தமிழ் மீது இந்தி–சமஸ்கிருத ஆதிக்கத்திற்கு இடம் கொடுக்க மாட்டோம். உயிரைக் கொடுத்தேனும் தமிழைக் காப்போம்!**

**(தொடரும்)**

அன்புடன்

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 15
27.02.2025.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!

## சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகளுக்கு நல உதவிகள்!

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்குகிறார்!

சென்னை, பிப்.28-

மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் சுதா தீனதயாளன்எம்.சி-தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில், கழக தலைவர் 72-வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்குகிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 8, மாநில உரிமையின் போராளி! மாதரை காக்கும் கொடையாளி!! எனும் தலைப்பில்சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 01.03.2025 சனிக்கிழமை அன்று காலை 10 மணியளவில், சென்னை, எழும்பூர், பயாஸ் மஹாலில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சுதாதீன தயாளன் எம்.சி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், கோ.ஏகப்பன், வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, கே.எஸ். எம். நாதன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, சரிதா மகேஷ் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, சாவித்திரி ஸ்ரீவீர ராகவன், ஜி.வி.நாகவள்ளி, எல். சுந்தர்ராஜன் எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி, பாத்திமாமுஸ்பர் எம்.சி, எம்.அண்ணபூரணி, கே.வள்ளி, கே.என். ஸ்நோபா, ஜே.தேவகிருபை, ஆர்.கிருஷ்ணவேணி, எஸ். விஜயலஷ்மி, சூர்யாரகு, அமுல்பாண்டியன், எஸ். ஜான்சிராணி, சகினாபேகம், யு.இலக்கியா, எம்.எழில் முன்னிலை வகிக்கின்றனர்.

இ.மொய்தீன், டால்பின் எஸ்.ஹரி, புதிதாமோகன், ஆர்.அம்மு, அ.சுகந்தி வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கழக துணைப்பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் மேயர் பிரியாராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.எம். யாழினி, பகுதி மகளிர் அணி அமைப்பாளர்கள் - பகுதி மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள்: ஆர்.மணிமேகலை, டி.தமிழ்செல்வி, தரணிசீனிவாசன், எஸ்.அருள்செல்வி, ஈஸ்வரி கண்ணன், ஆர்.பிரேமா, ஜெ.வரலட்சுமி, எஸ்.சந்திரகலா, அனுஷியா பாண்டுரங்கன், பிரேமாதயாளன், ஆர்.கோமதி, கே.ஜெயந்தி, ஜே.சுகந்தி, சி.அனிதா, பி. கலைவாணி, என்.ராஜகலா, டி.விமலா, எம்.கிரிஜா, சாந்தி, மாசிலாமணி, ஆர். இருதயமேரி, எம்.கிருஷ்ணவேணி.

மாநில நிர்வாகிகள்: ப. ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, சி.மகேஷ்குமார், தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், சங்கரிநாராயணன், எம்.விஜயகுமார், என்.பி. எம்.ஷேக் அப்துல்லா. மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவஹர், ஜி.மகா தேவன், இசட்ஆசாத் எம்.சி, பகுதி செயலாளர்கள்: கூ.பி. ஜெயின், எஸ்.முரளி, எஸ். ராஜசேகர், செ. தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே. வாசு, வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ். பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, க.நந்தீஸ்வரன், எஸ்.பன்னீர்செல்வம், த.வ. செம்மொழி எம்.சி, பி.ஜெ.துளசிங்கம், அ.உதசங்கர், பி. ரமேஷ், எம்.இப்ராஹிம் கனி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி. மாமன்ற உறுப்பினர்கள்: எம்.தாவூத் பீ, கே.சாரதா, லதா வாசு, எல்.ரமணி, எஸ். தமிழ்ச்செல்வி, டி. யோகப்பிரியா, பி.அமுதா, எஸ்.உமா, சி.ஸ்ரீதணி, என்.உஷாநாகராஜ், கே.பொற்கொடி, மு. சரவணன், எம்.கமல், எம்.இ.சேகர், வி.பரிமளம், ராஜேஷ்ஜெயின் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் அ.நிர்மலாதேவி, வி.மலர்கொடி ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

## கொளத்தூர் மேற்குப் பகுதியில் மனிதநேய விழா!

### ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் – கே.சுப்பராயன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, பிப்.28-

மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், எ. நாகராசன் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்டம், தி.மு.க. சார்பில், கழக தலைவர் 72-வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு கொளத்தூர் மேற்கு பகுதியில், மாபெரும் பொதுக் கூட்டம்-ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி, CPI கட்டுப்பாட்டுக்குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி, துணைதலைவர், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 9, மக்கள் உயர்வே முதல்வர் சிந்தனை! மாநிலம் கண்டது மகத்தான சாதனை எனும் தலைப்பில் கொளத்தூர் மேற்கு பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம் 01.03.2025 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, அகரம், பெரவள்ளூர் சதுக்கத்தில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் கொளத்தூர் மேற்குப் பகுதி கழக செயலாளர் எ.நாகராசன் எம்.சி. தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கின்றார்.

ஐ.சி.எப். வ.முரளிதரன், சி.மகேஷ்குமார், கே.சந்துரு, சரிதாமகேஷ்குமார், டி.லோகேஷ், தேவஜவஹர், எஸ்.பன்னீர்செல்வம். கொளத்தூர் கிழக்கு பகுதி கழக செலாளர்கள்: எஸ்.தனசேகர், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், ஜெ.டில்லிபாபு எம்.சி, த.கு.வெங்கடேஷ்வேம்புலி. கொளத்தூர் மேற்கு பகுதி நிர்வாகிகள்: இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி. வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, ஆர்.ஹரிபாபு, ஆர்.முரளி, அ.ஆனந்தராம், தோழர் ஜீ.சுப்பிரமணி. கொளத்தூர் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்; என்.சௌந்தர், என். பவுல்ராஜ், எஸ்.முருகன், என்.ராமச்சந்திரன், எம். டி.தமிழ்ச்செல்வன், பி.நந்தகுமார், O.ரமேஷ், தோழர் வி.ரவி. மாமன்ற உறுப்பினர்கள்: கே.சாரதா, எம்.தாவூத்பீ, சி.ஸ்ரீதணி, டி.யோகபிரியா, பி.அமுதா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி., CPI கட்டுப்பாட்டுக்குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., துணைதலைவர், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், இரா.விடுதலை ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் ப.அதிபதி, எம்.ஜே.சி. பாபு நன்றி கூறுகிறார்கள்.

---

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள

## ஆர்.பாலகிருஷ்ணனின் பணி சிறக்கட்டும்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, பிப். 28 –**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:–**

**தமிழ்வழியில் படித்து, தமிழிலேயே குடிமைப் பணித் தேர்வெழுதி IAS ஆகி, தமிழாராய்ச்சியின் பரப்பைத் தமிழ்நாட்டையும் தாண்டி, ஏன் இன்றைய இந்திய நாட்டையும் தாண்டி அகலப்படுத்திய அறிஞர் பாலகிருஷ்ணன் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதையொட்டி மகிழ்ச்சி நிறைந்த மனத்தோடு வாழ்த்தினேன்.**

**1812இல் வெளியான திருக்குறளின் முதல் அச்சுப் பதிப்பை அன்பளிப்பாகத் தந்தார்!**

**அவர் பணி சிறந்து, தொல்தமிழர் வரலாற்றின் பல புதிய பக்கங்களை உலகுக்கு வெளிக்காட்டட்டும்!**

**இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

---

## கழகத் தீர்மானக் குழு நிர்வாகிகள் கூட்டம்!

### தீர்மானக்குழுச் செயலாளர்கள் அறிவிப்பு!

சென்னை, பிப்.28-

கழகத் தீர்மானக் குழு செயலாளர்கள் மீ.அ.வைத்தியலிங்கம், கீரை எம்.எஸ். விஸ்வநாதன் அக்ரி கே.பி. டி.கணேசன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. தீர்மானக்குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 28.2.2025 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில், கழக தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தீர்மானக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : 1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா, 2. கழக ஆக்கப் பணிகள் - குறித்து ஆலோசிக்கப்படஇருப்பதாக தீர்மானக் குழுச் செயலாளர்கள். மீ.அ.வைத்தியலிங்கம், கீரை எம்.எஸ். விஸ்வ நாதன் அக்ரி கே.பி. டி. கணேசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் கோயம்பேடு வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (26.02.2025) நடைபெற்றது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு செயலாளர் காகர்லா உஷா, வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குனர் சமீரன், நிதித்துறை துணை செயலாளர் பிரதீக் தயாள், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் திரு.பாலகிருஷ்ணன், தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஃபர்கத் பேகம், வாரிய நிதி ஆலோசகர் அன்பழகன், தலைமை பொறியாளர் கண்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**வருவாய் துறை**

வ.து.ந.க.எண்.ஜி7 / 007478 / தொழில் வரி **(P1) / 2024**
மற்றும் வ.து.ந.க.எண்.ஜி7 / 000348 / சொத்து வரி **(P1) / 2025**

**இரட்டை உறையில் மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

மாநகர வருவாய் அலுவலர் (வருவாய் துறை தலைமையிடம்) அவர்களால் கீழ்கண்ட இரண்டு பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**வருவாய் துறை தலைமையிடத்து சொத்து வரி மற்றும் தொழில் வரி வசூலித்தல் ஆகிய இரண்டு பணிகளுக்கு 10 எண்ணிக்கை புள்ளி விவரப் பதிவாளர்கள் வீதம் இரண்டு பணிகள் (10.10) ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு பணியமர்த்தும் பணி.**

**பணியின் மதிப்பு ரூ.30,25,560/- இலட்சங்கள் (each work) (இரண்டு பணிகள்)**

முன்வைப்பு தொகை மொத்த பணியின் உத்தேச தொகையில் **1 % (each work)**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் **17.03.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் **18.03.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 823 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **மாநகர வருவாய் அலுவலர்**



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் – 12**

ம.அ.12.ந.க.எண்.இ1/5477/2024/04

**திறந்தவெளி மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / மண்டலம் - 12 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**மண்டலம் – 12, பகுதி – 35, வார்டு – 156 உள்ள சிந்து சாலையில் அமைந்துள்ள சிறு பாலம் இடித்து அகற்றி மீண்டும் புதிதாக அமைக்கும் பணி**

பணியின் தோராய மதிப்பு ரூ.50,00,334.18
பணியின் முன்வைப்பு தொகை: ரூ.51,000/- **(Net banking mode)**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **20.03.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **21.03.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 809 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் / ம – 12**